[23rd August 1961

* 1348 *Q.*—SRI M. D. THIAGARAJA PILLAI : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

சாயம் போடுபவர்கள், கைக்கருவிகள் செய்பவர்களுக்கான பயிற்சி நிலையம் ஒன்றினை திண்டுக்கல்லில் நிறுவும் உத்தேசம் ஏதேனும் உண்டா?

THE HON. SRI R. VENKATARAMAN : A scheme for the establishment of a training centre for Tool and Dye makers at Dindigul has recently been sanctioned by the Government.

Vaigai Dam

* 1349 *Q.*—SRI M. D. THIAGARAJA PILLAI (on behalf of SRI N. R. THIAGARAJAN :) கனம் பொது மராமத்து அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வைகை அணைக்கட்டு புதிய திட்டமிட்டப் பகுதியில் தற்போது எவ்வளவு பாசன வசதி பெற்றிருக்கிறது?

(இ) இன்னும் எவ்வளவு பாசன வசதி பெறும்?

(உ) பாக்கி வேலைகள் எப்போது ஆரம்பிக்கப்படும்?

THE HON. SRI P. KAKKAN : (அ) 18,818·14 acres.

(இ) 4,000 acres.

(உ) The work relating to the improvements to Maiathlamannadikulam for the benefit of 200 acres has been taken up for execution. The scheme to benefit 500 acres in Venkatachalapuram area is under consideration of the Government. The connected works will be taken up after the scheme is sanctioned. The investigation is now being done by Revenue and Public Works Department staff in respect of the hard cases of 3,000 acres in the Periyar delta.

SRI K. RAMACHANDRAN : ஸார், இது நேரிடையாக 20,000 ஏக்கரா வரையிலும் நீர்ப்பாசன வசதி சம்மந்தப்பட்ட தகவல் கொடுத்தார்கள். அது தவிர வருஷத்தில் இரண்டு மூன்று தரம் கீழ் ராமநாதபுரம் பகுதிக்கும் தண்ணீர் விடப்படுகிறது. ஆனால் அது சம்மந்தப்பட்ட ரூல்கள் பைனலைஸ் செய்யப்படவில்லை என்று சொல்லப்படுகிறது. வைகை ரிஸர்வாயரிலிருந்து, கீழ் ராமநாதபுரம் ஆயக்கட்டுகளுக்கும் தண்ணீர் கொடுக்க அந்த ஆயக்கட்டுகளையும் அதில் சேர்த்துக் கொள்ள விதிமுறைகளைப்பற்றி முடிவு செய்வார்களா?

THE HON. SRI P. KAKKAN : ஏற்கனவே வைகை அணைக் கட்டு கட்டும் காலத்தில் அதிகத் தண்ணீர் பாய்ந்து கொண்டிருந்தது. அதனால் மற்றவர்களுக்கு எந்த விதமான கஷ்டமும், நஷ்டமும் வரக்கூடாது என்று திட்டம் போட்டு, அந்தத் தண்ணீரைக் கொடுக்கிறோம். வைகையே இன்று காவேரியாகக் காட்சியளிக்கிறது. அந்த ஆயக்கட்டையும் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்றால், அதற்கு வேண்டிய ஏற்பாடு செய்யப்படும்.